# கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்



உங்கள் வாழ்க்கையை வளமாக்கும்
வல்லமையான தேவ செய்தி

சாம்ஜெபத்துரை

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*
WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

# எனக்காக யாவையும்!
## (HE WILL DO ALL FOR ME)

A. Devaraj

J. சாம் ஜெபத்துரை

Devaraj Pitchaimani, M.Sc., M.Ph
Municipal Women Children
Hospital Quarters
Tirunelveli - 627 00
Tamil Nadu

வெளியிடுபவர்:
J. சாம் ஜெபத்துரை
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை - 600 024.

முதற் பதிப்பு : ஆகஸ்டு 1992
நன்கொடை ரூ. 5/-
வெளியீடு எண் : 313

(இது சகோதரன் சாம் ஜெபத்துரை அவர்கள் பிரசங்கித்த தேவ செய்தியாகும்)

இந்த புத்தகத்தை வெளியிட உதவி செய்தவர்களை வாழ்த்துகிறோம், ஆசீர்வதிக்கிறோம்.

Mr K. Ratnam & Family
Jeddah, K. S. A.

கர்த்தர் சீயோனிலிருந்து அவர்களை ஆசீர்வதிப்பாராக.

அச்சிட்டோர்:-
ஒரேப் ஆர்ட் பிரிண்டர்ஸ்
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை - 600 024.

# எனக்காக யாவையும்!

''கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்; கர்த்தாவே, உமது கிருபை என்றுமுள்ளது; உமது கரத்தின் கிரியைகளை நெகிழவிடாதிருப்பீராக'' (சங் 138:8).

கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற அருமையான வாக்குத்தத்தம் இது! மகனே, மகளே, உனக்காக யாவையும் நான் செய்து முடிப்பேன் என்று அவர் வாக்களிக்கிறார். நாமோ ஆண்டவரைப் பார்த்து, ''ஆண்டவரே நீர் எனக்காக யாவையும் செய்து முடிக்கிறபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்'' என்று நாம் திரும்பத் திரும்ப அவரை ஸ்தோத்தரித்துத் துதிப்போமாக!

இப்பொழுது எல்லாரும் ஒரு நிமிடம் உங்களுடைய நெஞ்சிலே உங்களுடைய கைகளை வைத்துக்கொள்ளுங்கள். பரலோகத்திற்கு நேராக உங்களுடைய கண்களை ஏறெடுங்கள். பத்து முறை பயபக்தியோடு, ''கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்'' என்று சொல்லுங்கள். விசுவாசத்தோடு சொல்லுங்கள். சத்தமாய் சொல்லுங்கள். கர்த்தர் நிச்சயமாகவே உங்களுக்காக யாவையும் செய்து முடிப்பார்.

சங்கீதம் 57:2-ஐ வாசித்துப் பாருங்கள். ''எனக்காக யாவையும் செய்து முடிக்கப்போகிற தேவனாகிய உன்னதமான தேவனை நோக்கிக் கூப்பிடுவேன்'' என்று தாவீது ராஜா சொல்லுகிறார். இந்த வசனத்தை நாம் திரும்பத் திரும்ப சொல்லுவோமாக

இரண்டாவது வாசித்த இந்த வசனம் ஒரு சிறிய அழகிய ஜெபமாய் இருக்கிறது முதல் வாசித்த பகுதி ஒரு விசுவாச அறிக்கை. கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார் என்று விசுவாசத்தோடு கர்த்தரை நோக்கி சொல்லுங்கள்.

எனக்கு டாக்டர் கிளிபோர்டு குமார் அவர்கள் மேல் அளவில்லாத ஒரு அன்பு உண்டு. நல்ல ஒரு தேவனுடைய தாசன். கிருபை பெற்ற ஊழியக்காரர். என்னுடைய ஊழியத்தின் ஆரம்ப நாட்களிலிருந்து என்னை அவர் மிகவும் நேசித்து உற்சாகப்படுத்துகிறவர்.

ஒரு நாள் அவருடைய வீட்டிற்கு சென்றிருந்தபோது அங்கே ஒரு சகோதரி கண்ணீரோடுகூட அவரிடத்தில் தன்னுடைய பிரச்சனைகளை பகிர்ந்து கொண்டார்கள். அந்த சகோதரிக்கு முப்பது வயதை தாண்டிய பிறகும் திருமணம் ஆகவில்லை. அவர்களுடைய திருமணத்திற்கு யாரும் முயற்சிக்கவும் இல்லை.

அந்த சகோதரி சம்பாதிக்கும் பணத்தை வைத்துதான் அந்த முழு குடும்பமும் வாழ்ந்தது. தம்பிமார் படிக்க வேண்டும், தங்கைமார் படிக்கவேண்டும். ஆகவே கூட கொஞ்ச நாட்கள் வேலை செய்யக்கூடாதா என்றுதான் அவர்கள் எண்ணிக் கொண்டிருந்தார்கள். அதே நேரத்தில் அந்த சகோதரிக்கு வந்த மாப்பிள்ளை வீட்டார் ஒவ்வொருவரும் மிக அதிகமான ரொக்கமும், நகையும் கேட்டு வேதனைப்படுத்திக் கொண்டிருந்தார்கள். வந்த எல்லா வரங்களும் தடைப்பட்டு போய்க் கொண்டே இருந்தது.

அந்த சகோதரி தேவ ஊழியரான டாக்டர் கிளிபோர்டு குமாரிடம் கண்ணீர் சிந்தி, "ஐயா, எனக்கு எந்த விதத்திலும் ஆறுதல் இல்லை. வயதும் ஏறிக்கொண்டு போகிறது. என்னுடைய எதிர்காலத்தை நினைக்கும் போது பயமாகவும் கவலையாகவும் இருக்கிறது" என்று சொன்னார்கள்.

டாக்டர் கிளிபோர்டு குமார் அந்த சகோதரியை அன்போடு தேற்றி, "மகளே, பயப்படாதே; நீ ஒவ்வொரு நாளும் காலை எழுந்ததும், நூறு முறை 'கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார், கர்த்தர் எனக்காக

யாவையும் செய்து முடிப்பார்' என்று சொல்லிக் கொண்டேயிரு. நிச்சயமாகவே அவர் உனக்காக யாவையும் செய்துமுடிப்பார்'' என்று சொல்லி ஜெபித்து அனுப்பினார்.

ஆறு மாதங்கள் கழித்து நான் மீண்டும் ஒரு முறை டாக்டர் கிளிபோர்டுகுமார் அவர்களுடைய வீட்டிற்கு சென்றபோது அந்த சகோதரியும் அங்கே தற்செயலாய் வந்திருந்தார்கள். அவர்களுடைய முகத்தில் ஒரு சந்தோஷம் நிலவியது. அவர்களுடைய கைகளிலே திருமண அழைப்பிதழையும் எடுத்துக் கொண்டு வந்திருந்தார்கள்.

அவர்கள் அன்று மகிழ்ச்சியோடு சொன்னார்கள், ''ஐயா, நீங்கள் சொன்னபடியே ஒவ்வொருநாளும் கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார் என்று திரும்ப திரும்ப சொல்லிக் கொண்டேயிருந்தேன். என்னுடைய விசுவாசத்தை ஆண்டவர் மேல் வைத்தேன். அப்படியே கர்த்தர் இந்த திருமணத்தை எனக்கு ஒழுங்கு செய்திருக்கிறார். நல்ல பக்தி உள்ள மாப்பிள்ளையை கர்த்தர் கட்டளையிட்டார். திருமண அழைப்பிதழை பெற்றுக்கொள்ளுங்கள், திருமணத்திற்கு வாருங்கள்'' என்று அழைத்து அந்த கலியாண கார்டை கொடுத்தார்கள்.

டாக்டர் அவர்களைப் பார்த்து, ''எப்படி மாப்பிள்ளை பார்த்தீர்கள்? எப்படி ஒழுங்கானது?'' என்று பல கேள்விகளைக் கேட்டார். அதற்கு அந்த சகோதரி சிரித்துக் கொண்டு ''கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடித்தார்'' என்றார்கள். ரொக்கங்களுக்கும் நகைகளுக்கெல்லாம் என்ன செய்தீர்கள் என்று கேட்டபோது, ''கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடித்தார்'' என்றார்கள். எத்தனை ஒரு அருமையான பதில் பாருங்கள்!

சில நாட்களாய் இந்த வசனம் என் உள்ளத்தில் திரும்ப திரும்ப வந்து கொண்டேயிருக்கிறது. வாக்குத்தத்த வசனமாய் இந்த வசனத்தை கர்த்தர் உங்களுக்குக் கொடுக்

ளும்படி சித்தமாயிருக்கிறார். இன்றைக்கு நிச்சயமாகவே இந்த வசனம் உங்களுக்குள் விசுவாசத்தைக் கொண்டு வருகிறது மாத்திரமல்ல, தேவ வல்லமையையும், அற்புதத்தையுங்கூட கொண்டு வரும். ஆகவே இன்றைக்கு கர்த்தருடைய ஊழியக்காரனும், தீர்க்கதரிசியாய் இருந்து உங்களுக்கு திட்டமும் தெளிவுமாய் சொல்லுகிறேன், "கர்த்தர் உங்களுக்காக யாவையும் செய்து முடிப்பார்."

அல்லேலூயா!

இதோ, புதிய வாசல்கள் உங்களுக்குத் திறக்கப்படுகிறது. மகிமையான வாசலின் வழியாய் கர்த்தர் உங்களை அழைத்துச் செல்லுகிறார். அவர் உங்கள் மேல் கரிசனையுள்ள கர்த்தர். உங்களுக்காக யாவையும் செய்கிற தேவன். உங்கள் சத்துருக்கள் உங்களுக்கு சிநேகமாகும்படி செய்கிற ஆண்டவர். அவரே உங்களுக்காக யாவையும் செய்து முடிக்கிறவர்.

இதில் விசேஷம் என்னவென்றால் நாம் எவ்வளவுக்கெவ்வளவு கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார் என்று சொல்லுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு கர்த்தரிடத்தில் சார்ந்துகொள்ளுகிறோம். விசுவாசத்தோடு வாயினால் அறிக்கை செய்கிறவர்கள் இந்த அறிக்கையை செய்தபின்பு கர்த்தரில் சார்ந்துகொள்ளுகிறார்கள். கர்த்தரிடத்தில் பாரத்தை இறக்கி வைத்துவிட்டு தங்களுடைய கவலைகள், கண்ணீர்கள், யாவையும் கர்த்தருடைய பாதத்தில் ஊற்றிவிட்டு கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார் என்று சொல்லுகிறவர்களால்தான் கர்த்தரைச் சார்ந்துகொள்ள முடியும்.

கர்த்தரைச் சார்ந்துகொள்ளாமல் மனிதனை தேடி ஓடி மனிதன் எனக்காக எல்லாவற்றையும் செய்வான் என்று எதிர்பார்க்கும்போது தோல்வியைத்தான் தழுவ முடியும். ஏனென்றால் மனிதன் புல்லைப்போல பூத்து மறைந்துபோவான். அவனோடு அவன் மேல் வைக்கப்படு

கிற நம்பிக்கையும் மறைந்துபோகிறது. தேவபிள்ளையே, நாசியிலே சுவாசமுள்ள மனிதனை நம்புவதற்கு அவன் எம்மாத்திரம், மனிதனை நம்பி அவன்மேல் சாய வேண்டாம். கர்த்தரை நம்பி அவரில் சார்ந்துகொள்ளுங்கள். கர்த்தரை நம்புகிறவனே செழிப்பான்.

சங்கீதம் 39:7-ஐ வாசித்துப் பாருங்கள். "இப்பொழுதும் ஆண்டவரே, நான் எதற்கு எதிர்பார்த்திருக்கிறேன்? நீரே என் நம்பிக்கை உம்மிலே என்னுடைய நம்பிக்கையை வைத்திருக்கிறேன். நீரே எனக்காக யாவையும் செய்து முடிக்கிற தேவன்."

கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார் என்று சொல்லும்போது அவரிலே முற்றிலுமாய் சார்ந்துகொள்ளுகிறோம். அவருடைய வல்லமையிலே சார்ந்துகொள்ளுகிறோம். அவருடைய கிருபையிலே சார்ந்துகொள்ளுகிறோம். சார்ந்துகொண்டு அப்பா, நீரே எனக்காக யாவையும் செய்து முடிக்கிறவர் என்று முழு பொறுப்பையும் அவருடைய கைகளிலே வைத்துவிடுகிறோம்.

அருமையான தேவனுடைய பிள்ளையே, என்னென்ன பிரச்சனைகள் உனக்கு உண்டு? என்னென்ன போராட்டங்கள் இருக்கிறது? என்னென்ன காரியத்திலே ஒரே தடையாய் இருக்கிறது? நீ எதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாய்? கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார் என்று விசுவாசத்தோடு சொல்லுவாயாக.

எந்த ஒரு மனுஷன் கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார் என்று சொல்லுகிறானோ அவன் ஒரு நாளும் தன்னுடைய பாரத்தை தானே சுமக்க வேண்டிய அவசியம் இருக்காது. கண்ணீரிலே தன் வாழ்நாளை கழிக்க வேண்டிய அவசியமே இல்லை. துயரத்தோடு தத்தளிக்க வேண்டிய அவசியமே இல்லை. யார் யார் கர்த்தர்மேல் தங்கள் பாரத்தை வைத்துவிட்டு அவர் தங்களை ஆதரிக்கும்படி கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்

என்று சொல்லுகிறார்களோ அவர்களுக்கு உதவி செய்ய நம் அருமை ஆண்டவர் ஆவலுள்ளவராயிருக்கிறார்.

வேதம் சொல்லுகிறது, கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு அவர் உன்னை ஆதரிப்பார். அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியினால் உங்களுடைய கவலைகளை யெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள். பாரத்தை வைத்து விடுங்கள். அதோடுகூட கவலைகளையும் வைத்து விடுங்கள்.

ஒரு உயர்தர அதிகாரியைக் குறித்து அறிந்தேன். அரசாங்கத்தில் பெரிய பொறுப்புகள் அவருக்கு இருந்தது. இடைவிடாத வேலை, அதிகமான வேலைப்பளு. ஒவ்வொரு நாளும் அவருக்கு மேல் உள்ள மந்திரிமார்களும், அதிகாரிகளும் இந்த ரிப்போர்ட் எங்கே? அந்த ரிப்போர்ட் எங்கே? என்ன செய்தாய் என்றெல்லாம் சொல்லி விரட்டிக் கொண்டே இருந்தார்கள்.

ஒரு பக்கம் அரசியல்வாதிகள் விரட்டினார்கள். இன்னொரு பக்கம் அதிகாரிகள் விரட்டிக்கொண்டே இருந்தார்கள். மந்திரிகள் விரட்டிக் கொண்டிருந்தார்கள். தொழில் சங்க தலைவர்களும் விரட்டிக் கொண்டிருந்தார்கள். தாங்க முடியாத பிரச்சனையாய் இருந்தது. அவர் எல்லா வேதனைகளையும் சுமந்து பார்த்தார். அவரால் சுமக்க முடியவில்லை. அலுவலக பொறுப்புகள் அவ்வளவு அதிகமாய் இருந்தது. அவர்மேல் குற்றஞ்சாட்டுகிறவர்கள் அவ்வளவு அதிகமாய் இருந்தார்கள். அவரால் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை.

ஒருநாள் அவருக்கு பயங்கரமான நெஞ்சுவலி வந்துவிட்டது. நெஞ்சு மிகவும் வலித்தது. மிகுந்த வேதனையோடுகூட டாக்டரிடம் சென்றார். டாக்டர் பரிசோதித்துவிட்டு இரத்த அழுத்த நோய் உங்களைத் தாக்கியிருக்கிறது. ஆகவே நீங்கள் ஏறக்குறைய ஒரு மாதக்காலம் ஆஸ்பத்திரியிலே தங்கியிருந்து பூரண ஓய்வு எடுக்க

வேண்டும். இல்லாவிட்டால் நீங்கள் உயிர் பிழைப்பது கடினம் என்று சொல்லிவிட்டார்கள். அவர் அந்த டாக்டரைப் பார்த்து ஐயா இன்று என்னுடைய வீட்டிற்கு போய்விட்டு நாளை வருவதற்கு அனுமதியுங்கள். நான் ஒரு பெரிய காரியம் செய்ய வேண்டும். நாளை காலை வந்துவிடுவேன் என்று சொல்லிவிட்டு தன் வீட்டிற்கு வந்தார்.

''எனக்காக யாவையும் செய்து முடிப்பார்'' என்ற வசனத்தை அவர் விசுவாசித்தார். ஆகவே அவர் தன்னுடைய ஜெப அறைக்குள் போய் கதவை தாழிட்டுக் கொண்டார். ஒரு பேப்பரையும் பேனாவையும் எடுத்து தன்னுடைய பிரச்சனைகள், கவலைகள் எல்லாவற்றையும் வரிசையாக எழுதினார்.

தான் கவனிக்க வேண்டிய பொறுப்புகள் எல்லாவற்றையும் எழுதினார். சொந்தக்காரர்களால் வந்த பிரச்சனைகள், இனத்தவர்களால் வந்த பிரச்சனைகள், சொந்த குடும்பத்தினால் வந்த பிரச்சனைகள், தொழில் சங்கத்தினால் வந்த பிரச்சனைகள் எல்லாவற்றையும் வரிசை வரிசையாக எழுதினார். தான் நிறைவேற்றி முடிக்க வேண்டிய கடமைகள் எல்லாவற்றையும் எழுதினார். முடிவிலே அவர் திறந்த வேதாகமத்தில் வைத்து கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார் என்ற வார்த்தையுட் எழுதினார்.

பின்பு விடுதலையோடும், சந்தோஷத்தோடும், கர்த்தரை அவர் துதிக்க ஆரம்பித்தார். ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டேயிருந்தார். அப்படியே தூங்கி விட்டார் தன்னுடைய பாரத்தை எல்லாம் கர்த்தருடைய சமுகத்திலே வைத்ததினாலே உள்ளத்தின் பாரங்கள் இரங்க ஆரம்பித்தது. கர்த்தர் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்ளுவார் என்ற விசுவாசம் அவருக்குள் வந்தது.

காலை தூங்கி எழுந்ததும் அவருடைய சரீரம் வெகுவாய் மாறி இருப்பதை உணர்ந்தார். நெஞ்சை அடைத்

துக் கொண்டிருந்த காரியங்களின் ஆதிக்கங்கள், போராட்டங்கள் எல்லாம் விலகி போய்விட்டதை உணர்ந்தார். புதிய ஆரோக்கியம், புதிய பெலன், அவரை நிரப்பியிருந்தது. கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடித்து விட்டார் என்று சொல்லி மீண்டும் அவர் ஆண்டவரைத் துதித்தார்.

மறுநாள் அவர் ஆஸ்பத்திரிக்கு வந்தபோது டாக்டர்கள் அவரை பரிசோதித்தார்கள். அங்கே எல்லாருக்கும் ஒரே ஆச்சரியமாகிவிட்டது. காரணம் அவரிலே வியாதிக்கான எந்த அறிகுறியும் இல்லை. இரத்த அழுத்தமும் இல்லை. இருதய வலியும் இல்லை. நரம்புகளின் தளர்ச்சிகளும் இல்லை. டாக்டர்களுக்கு ஒரே ஆச்சரியம்! உங்களை சரீரத்திலே ஏதோ ஒரு அற்புதம் நடந்திருக்கிறதே என்ன நடந்தது? ஏதாவது மருந்து சாப்பிட்டீர்களா? ஏதாவது டானிக் குடித்தீர்களா? என்று கேட்டார்கள்.

அதற்கு அவர் ஆம் டானிக் குடித்தேன். சங்கீதம் 138:8-ல் உள்ள டானிக்தான் அந்த டானிக். "கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்" என்று திரும்ப திரும்ப சொல்லிக் கர்த்தரை மகிமைப்படுத்தினேன். கர்த்தர் உண்மையாகவே என்னுடைய பாரங்கள், கவலைகள் எல்லாவற்றையும் பொறுப்பெடுத்துக் கொண்டார். அவர் அவைகளை எல்லாம் சிலுவையில் சுமந்து தீர்த்திருக்க நான் ஏன் வீணாக சுமந்து கொண்டிருக்க வேண்டுமென்று கேட்டார்.

அடுத்த நாள் அவர் புது பெலத்தோடும், புது வல்லமையோடும், கர்த்தருடைய பிரசன்னத்தோடும் அலுவலகத்திற்கு சென்றபோது அங்கே இருந்தவர்களின் ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. ஒவ்வொரு நாளும் தன்னுடைய பாரங்களை கர்த்தரிலே இறக்கி வைக்க கற்றுக்கொண்டார்.

அருமையான சகோதரனே, சகோதரியே, இன்றைக்கு உனக்கு இருக்கிற பிரச்சனை என்ன? உன் வாழ்க்கையில்

உள்ள போராட்டம் என்ன? உன் உள்ளம் நிறையாத கவலையினால் நிறைந்திருக்கிறது அல்லவா? ஏதோ ஒரு சஞ்சலம் உன்னை வாட்டிக் கொண்டிருக்கிறது அல்லவா? நீ சந்தோஷமில்லாமல் சமாதானமில்லாமல் நடைபிணமாய் அலைந்து திரிந்து கொண்டிருக்கிறாய் அல்லவா?

தாவீது ஏனோதானோ என்று இந்த வார்த்தையை வேதத்தில் எழுதி வைத்து விடவில்லை. ஒவ்வொரு காரியத்திலும் கர்த்தரை ருசித்து ருசித்து அவருடைய வல்லமையை உணர்ந்து உணர்ந்து நல அனுபவத்திலிருந்து எழுதியிருக்கிறார். சிறு வயதிலிருந்து முதிர் வயதாகும் வரையிலும் கர்த்தர் தனக்காக என்னென்ன எல்லாம் செய்து முடித்தார் என்பதை தியானித்து தியானித்து எழுதி இருந்திருக்கக்கூடும்.

தாவீது சிறுவனாயிருந்தபோது ஒரு முறை ஒரு பயங்கரமான ஒரு பெரிய கரடி அவனுக்கு விரோதமாய் சீறிக் கொண்டு வந்தது. தாவீதினுடைய உள் மனம் ஐயோ, பெரிய கரடி வந்திருக்கிறது என்னுடைய ஆடுகளில் சிறந்த ஆட்டை அது பிடித்துக் கொண்டுபோய் விடுமே என்ன செய்வது நம்மால் கரடியை பேற்கொள்ளவே முடியாது என்று கலங்கி இருந்திருக்கக்கூடும். அதே வேளையில் அவன் தன்னை திடப்படுத்திக் கொண்டான். "கர்த்தர் என்னோடிருக்கிறார்! கர்த்தருக்கு முன்பாக இந்த கரடி எம்மாத்திரம்? கர்த்தருடைய பெலத்தினால் இந்த கரடியின் வாயை ஆட்டுக்குட்டியை கிழிப்பதைப்போல கிழித்துபோடுவேன். கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்" என்று சொல்லி கரடியை பின் தொடர்ந்து போய் தலையில் அடித்து அதை கொன்று போட்டான்.

சத்துருக்களுக்கு முன்பாக அவர் உனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி உன் தலையை எண்ணெயினால் அபிஷேகம் பண்ணுகிறார். உன் பாத்திரம் நிரம்பி வழிகிறது. தேவபிள்ளையே, கர்த்தர் உனக்காக யாவையும்

செய்து முடிக்கிறபடியினால் இன்றைக்கு உனக்கு எதிராய் இருக்கிற சத்துருக்களை இனி ஒருபோதும் நீ காண்பதில்லை.

தாவீதுக்கு விரோதமாய் பெரிய கோலியாத் ராட்சசன் போல எழும்பி வந்தபோது தாவீது ராஜா சொல்லியிருந்திருக்கக்கூடும். "கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்!"

எந்த ஒரு மனுஷன் அவ்விதமான விசுவாச வார்த்தைகளை அறிக்கையிடுகிறானோ அவன் எவ்வளவு பெரிய கோலியாத் வந்தாலும் கலங்குவதில்லை எவ்வளவு துன்மார்க்கர் வந்தாலும் அஞ்சுவதில்லை. தனக்காக யாவையும் செய்து முடிக்கிற கர்த்தரையே அவன் சார்ந்து கொள்ளுவான்.

## 1. சிருஷ்டிப்பிலே யாவையும் செய்து முடித்தார்!

உலக சிருஷ்டிப்பைப் பாருங்கள். இந்த உலகம் மனுஷனுக்காக சிருஷ்டிக்கப்பட்டது. மனுஷன் குடியேற வேண்டுமென்று அவனுக்கு ஏற்றபடி இந்த உலகத்தை கர்த்தர் உருவாக்க சித்தமானார்.

அருமையான தேவனுடைய பிள்ளையே, சற்று சிந்தித்துப் பார். இந்த உலகத்தில் தேவன் மனுஷனை உருவாக்குவதற்கு முன்பாகவே அவனுக்கு என்னென்ன வேண்டுமோ அத்தனையும் கர்த்தர் மனுஷனுக்காகவே செய்து முடித்துவிட்டார். மனுஷனுக்காக யாவையும் செய்து முடிக்கும்படி அவருடைய உள்ளம் மனுஷன்மேல் நோக்கமாய் இருந்தது. கடமையை துரிதமாய் அவர் நிறைவேற்றினார்.

மனுஷனுக்கு என்னென்ன பிரியமாய் இருக்கும்? அவனுக்கு அழகிய மலர்கள், காய் கனிகள், அழகிய நீரூற்றுகள், நீல நிற மலைகள் என்று பல காரியங்களை மனிதனை எண்ணி எண்ணி அவர் உருவாக்கினார். மனிதனுக்கு என்னென்ன தேவை என்பதையும் அவர் உணர்ந்

தார். மனிதனுக்கு சூரியன், சந்திரன், நட்சத்திரங்களை உருவாக்கினர். பகலிலே வெளிச்சம் கொடுக்க சூரியனுக்கு தகுதியான வெப்பத்தைக் கொடுத்தார். இரவிலே சந்திரனுக்கு குளிர்ச்சியான ஒளியைக் கொடுத்தார்.

பாருங்கள் நம்முடைய வாழ்க்கையிலும்கூட ஒவ்வொரு சீசனுக்கு ஏற்றபடி பல வகையான பழங்களை கர்த்தர் தந்து கொண்டிருக்கிருர் அல்லவா? வெயில் காலம் வருகிறது ஏழை மக்களும் வாங்கி சாப்பிட்டு வெயிலின் அகோரத்திலிருந்து காக்கப்படும்படி தர்பூசனி பழத்தை தந்திருக்கிருர். இன்னும் கொஞ்ச நாட்களாகிவிட்டால் ஆப்பிள் பழம் சீசன் வந்துவிடுகிறது. ஆரஞ்சு பழம் சீசன் வந்துவிடுகிறது. சுவைமிக்க மாம்பழம் சீசன் வருகிறது. வருடமுழுவதும் பல வகையான பழங்கள் மனிதனுக்காக தந்து கொண்டேயிருக்கிருர்.

இயேசு நம்மை எண்ணி எண்ணி எவ்வளவு நன்மையான காரியங்களை எல்லாம் சிருஷ்டித்திருக்கிருர்! எவ்வளவு அழகிய இயற்கை சூழ்நிலைகள், இயற்கை காட்சிகள், மலைகள், கடல்கள் எல்லாவற்றையும் அவர் உருவாக்கிவிட்டு கடைசியில்தான் அவர் மனுஷனை உருவாக்கிஞர்.

ஆறும் நாளிலே களிமண்ணிலிருந்து மனிதனை உருவாக்கி தன்னுடைய சுவாசத்தை அவன்மேல் ஊதி அவனை ஜீவாத்துமாவாக்கிஞர் தம்முடைய சாயலிலும், ரூபத்தின்படியும் மனிதனை சிருஷ்டித்தார் என்று வேதம் சொல்லுகிறது. மனிதனை உருவாக்கின தேவன் அவனைக் கொண்டு வந்து ஏதேன் தோட்டத்தில் வைத்தார்.

ஒரு நாள் ஆதாம் தோட்டத்தை பார்த்து பரவசமடைந்து இதெல்லாம் யாருக்காக ஆண்டவரே யாருக்காக என்று கேட்டிருந்திருப்பான். கர்த்தர் அன்போடு ஆதாமைப் பார்த்து சொல்கிருர் மகனே எல்லாம் உனக்காகத்தான். உனக்காகவும், உன்னுடைய சந்ததிக்காகவும் இவைகளை எல்லாம் நான் சிருஷ்டித்திருக்கிறேன்.

கர்த்தர் தான் சிருஷ்டித்த சகல மிருக ஜீவன்களையும், பறவைகளையும் அவனண்டை கொண்டுவந்து காட்டிய போது ஆதாம் பரவசமடைந்து ஒவ்வொன்றுக்கும் பெயர் சூட்டினான். ஆதாம் என்னென்ன பெயர் கொடுத்தானோ அவைகளே அவைகளுக்கு பெயராயிற்று

கர்த்தர் அன்போடு ஆதாமைப் பார்த்து சொல்கிறார் மகனே, நான் உன்னை உருவாக்குவதற்கு முன்பாக உன் மேல் அன்புகொண்டு உன்னை எண்ணி எண்ணி இவைகளை எல்லாம் சிருஷ்டித்து முடித்தேன். இவைகளை எல்லாம் உருவாக்குவதற்கு ஆறே ஆறு நாட்கள்தான் தேவைப் பட்டது. இந்த ஆறு நாட்களிலும் எல்லாவற்றையும் செய்து முடித்த பிறகு உன்னை உருவாக்க சித்தமானேன். நீ என்னுடையவன் என்றார் அன்போடு!

தேவபிள்ளையே, உன் வாழ்க்கையைத் திரும்பிப்பார். சிறு வயதிலிருந்து இம்மட்டிலும் கர்த்தர் உனக்கு செய்த வைகளை எல்லாம் நீ தியானிப்பாய் என்றால் கர்த்தரை போற்றி புகழாமல் இருக்கவே முடியாது. தாயின் வயிற்றில் இருக்கும்போதே கர்த்தர் உனக்கு என்னென்ன செய்திருக்கிறார் தெரியுமா?

பெரிய பெரிய கம்ப்யூட்டர்கள் எல்லாம் உங்களுடைய சரீரத்திற்குள் பொருத்தி வைத்திருக்கிறார். மனித மூளை இயங்குவதைக் குறித்து நமக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது தாயின் வயிற்றுக்குள்ளே அறியப்படாதவர்களாய் இருந்தாலும்கூட நமக்காக யாவற்றையும் செய்து முடிக்க கர்த்தர் ஆவலுள்ளவராய் இருக்கிறார்.

சற்று யோசித்துப் பாருங்கள். நீங்கள் உங்கள் தாயின் வயிற்றுக்குள் எப்படி இருந்திருப்பீர்கள்? கை கால்களை முடக்கிக்கொண்டு படுத்திருந்திருப்பீர்கள். தாய் வயிற்றிலே வாழ்ந்த பத்து மாதங்களுக்குள்ளாக கர்த்தர் ஒவ்வொரு அவயவங்களையும் உருவாக்கி வளரும் படி செய்திருக்கிறார். தாயின் வயிற்றிலே நீங்கள் சுவாசிப் படி

பதற்கு நல்ல மூக்கு, பார்ப்பதற்கு நல்ல கண்கள், கேட்பதற்கு கூர்மையான காதுகள் எல்லாவற்றையும் அவர் சிருஷ்டிக்க வல்லமையுள்ளவராய் இருந்தாரே!

அருமையான தேவனுடைய பிள்ளையே, இன்றைக்கும் நமக்காக சிருஷ்டிக்கும்படி தேவன் ஆவலுள்ளவராய் இருக்கிறார்.

ஒரு உண்மை சம்பவத்தை உங்களோடுகூட பகிர்ந்து சொல்ல ஆசைப்படுகின்றேன். சில ஆண்டுகளுக்கு முன்பு ஜெயவேல் என்று சொல்லப்பட்ட ஒரு சகோதரன் சென்னையில் ஐ.சி எப்.ல் பணியாற்றிக் கொண்டிருந்தார். ஒரு நாள் தான் சம்பளம் வாங்கிவிட்டு வீட்டுக்கு செல்லும் வழியில் யாரோ தன் முதுகில் அடிப்பதைப் போல உணர்ந்தார். திரும்பி பார்த்தார் அங்கே ஒருவருமே இல்லை.

யார் என்னை அடித்தது என்று சொல்ல தலைக்குத் தானே கேள்விகளைக் கேட்டுக்கொண்டார். வீட்டுக்கு வந்தார். அவருடைய கை கால்கள் ஒன்றும் சரியாக இயங்கவில்லை. விழுந்து விட்டன. டாக்டரிடத்தில் போய் சோதித்தார். சரீரத்தில் எந்த அவயமும் இயங்கவில்லை கண் பார்வை மங்கி விட்டது ஒரு சில நாட்களுக்குள் அவருடைய வாய், செயலற்று போனது. அடுத்த நாள் அவருடைய மூக்கு, வாய் சுவை எல்லாம் நீங்கிபோய்விட்டது.

அவரை பரிசோதித்த டாக்டர்கள் அவருடைய நரம்பு மண்டலம் முழுவதும் கெட்டுபோய் அழுகி போய் இருக்கிறது. இனி மரணமேத் தவிர வேறு வழியில்லை என்று கைவிட்டுவிட்டார்கள்.

சரீரத்திலே எந்த ஒரு பகுதி கெட்டுபோயிருந்தாலும் அதை மாற்றிவிடலாம். உதாரணமாக இருதயம் சரியாக வேலை செய்யாவிட்டால் மாற்று இருதயம் பொருத்திவிடலாம். எலும்பு உடைந்தது என்றால் வேறு எலும்பை

மாற்றிவிடலாம். சதை அழுகிபோனதென்றால் வேறு சரீரத்திலிருந்து சதை எடுத்துக் கொண்டுவந்து பொருத்தி விடலாம். ஆனால் நரம்பு கெட்டு போன தென்றால் அந்த நரம்பை மாற்றவே இயலாது.

எந்த டாக்டராலும், விஞ்ஞானியாலும் கெட்டு போன நரம்பிற்கு பதிலாக புதிய நரம்பை உருவாக்க முடியாது. வேறு நரம்பை கொண்டுவந்து வைக்கவே முடியாது. ஆகவே அவரை சோதித்த டாக்டர்கள் கடவுளால் புதிய நரம்பு சிருஷ்டிக்கப்பட்டால் ஒழிய வேறு எந்தவிதத்திலும் உங்களுக்கு யாராலும் உதவி செய்ய முடியாது என்று சொல்லி விட்டார்கள். அவர் மரணமடைவதற்கு டாக்டர்கள் கொடுத்த கெடு நாட்கள் இரண்டே இரண்டு நாட்கள்தான்.

அந்த சகோதரனைத் தூக்கி ஒரு ரிக்ஷாவில் வைத்து என்னுடைய மனைவி வீட்டுக்கு கொண்டு வந்தார்கள். அங்கே ஒரு ஊழியக்காரர் இருக்கிறார் என்று கேள்விப் பட்டபடியினால் அங்கே எடுத்துக் கொண்டு வந்திருந்தார் கள். ஆனால் அன்று பார்த்து அந்த ஊழியக்காரர் அங்கே இல்லை.

அந்த ஊழியக்காரர் இன்னொரு இடத்தில் கூட்டம் நடத்துகிறார் என்று கேள்விப்பட்டு அங்கே தூக்கிக் கொண்டு போனார்கள். ஆனால் அதற்குள் கூட்டம் முடிந்து ஊழியக்காரர் போய்விட்டார். நேரம் கடந்து கொண்டே இருந்தது. அவர் செத்த பிரேதம் போலானார். மீண்டும் அவரை என் மனைவியின் வீட்டுக்கு கொண்டு வந்தார்கள். கண்கள் முற்றிலும் குருடாய் போனது. வாய் ஊமையாகி போய் விட்டது காது செவிடானது. கை கால் நரம்பு மண்டலம் எல்லாம் பாதிக்கப்பட்டு இருந்தது.

திடீரென்று அவர்கள் எதிர்பார்த்திருந்த ஊழியக் காரர் தற்செயலாய் அங்கே வந்தார். அந்த

சகோதரனைப் பார்த்தார். நம்பு மண்டலங்கள் எல்லாம் கெட்டுப் போய் கிடந்ததைக் கண்டார். "மனி தனுக்காக சகலவற்றையும் சிருஷ்டித்த ஆண்டவர் இந்த சகோதரனுக்கு நரம்புகளை சிருஷ்டிக்க வல்லமையுள்ள வராக இருக்கிறார். இந்த சகோதரனுக்காக யாவையும் செய்து முடிக்கும்படி இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் இருக்கிறார்" என்றார்.

ஆகவே பக்கத்தில் நின்றுகொண்டு நசரேயனாகிய இயேசுவின் நாமத்தில் இந்த கண்களில் உள்ள நரம்பு களுக்கு கட்டளையிடுறேன் கண்கள் திறக்கப்படுவதாக என்றார். என்ன ஆச்சரியம் கண்களில் தேவ வல்லமை இறங்கியது. கண்கள் பார்க்க ஆரம்பித்து விட்டன. வாய் திறக்கக்கடவது என்று கட்டளையிட்டார் அப்ப டியே வாய் திறந்தது. காதுகள் கேட்கக்கடவது என்று கட்டளையிட்டார் காதுகள் கேட்க ஆரம்பித்தது.

அவருடைய கைகளைப் பிடித்து நசரேயனாகிய இயேசு வின் நாமத்தில் எழுந்து நட என்று சொன்னார். அவர் எழுந்து நடந்து ஓட ஆரம்பித்தார். புதிய நரம்புகளை கர்த்தர் அவருக்கு சிருஷ்டிக்க வல்லமையுள்ளவராக இருந்தார். ஆம், நம்முடைய தேவன் நமக்காக யாவை யும் செய்து முடிக்கிறவர்.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, அந்த கர்த்தர் இன்றைக்கும் நம்முடைய மத்தியிலே ஜீவனுள்ள வராய் அசைவாடிக் கொண்டிருக்கிறார் அந்த தேவன் உங்கள்மேல் மனதுருகி இப்பொழுதே அற்புதத்தை செய் வார். உங்களுடைய சரீர உறுப்புகள் செயல்படாமல் இருந்தால் செயல்பட செய்வார். இல்லாவிட்டால் புதிய தொரு அவயவத்தை உருவாக்கி உங்களுக்குத் தந்தருள் வார்.

ஏதேன் தோட்டத்திலே மனுஷனை உருவாக்குவதற்கு முன்பாக அவனுக்கு இன்னென்ன தேவை என்பதை

கரைந்து அவராகவே நிறுத்தி எல்லாவற்றையும் இருந்து படுக்கார். மனுஷன் எந்தேமாவுமாக மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்பதில் தேவன் அவ்வளவு அக்கறை கொண்டவராக இருக்கிறார். அந்த தேவன் மட்டமானவரும் உன்னவர் அல்ல.

ஆபிரகாமுக்காக மக்களுக்கு அற்புதங்களைச் செய்த தேவன் இன்று உங்களுக்கும் நிச்சயமாகவே அற்புதத்தைச் செய்வார். இன்றைக்கு உங்களுக்கு விரோதமாக மலைபோல இருக்கும் பிரச்சனைகள் யாவும் பனிமலைபோல நீங்கிப்போகும். உங்களுக்கு விரோதமாய் இருக்கும் எதிரோ மத்தில் உடைக்கும்படி கர்த்தர் உங்களுக்காக வைராக்கியம் கொண்டவராயிருக்கிறார். அவரே உங்களுக்காக யாவையும் செய்து முடிக்கிற கர்த்தர்.

## 2. அற்புதங்களைச் செய்து முடிக்கிறவர்!

முதலாவது அவர் சிருஷ்டிப்பிலே யாவையும் செய்து முடிக்கிற தேவன் என்று கவனித்தோம். இரண்டாவதாக அவர் அற்புதங்கள் மூலமாய் நமக்காக யாவையும் செய்து முடிக்கிற தேவன்.

ஆபிரகாம் கர்த்தருக்கு ஒரு புதிய பெயரைச் சூட்டினார். அதுதான் ''யேகோவாயீரே'' என்பதாகும். ''யெகோவாயீரே'' என்ற பெயருக்கு ''கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்'' என்பது அர்த்தமாகும். அல்லது எனக்காக தேவனுடைய பர்வதத்தில் பார்த்துக் கொள்ளப்படும் என்பது பொருளாகும்.

ஆண்டவருக்கு ஏன் அந்த பெயர் வந்தது தெரியுமா?

கர்த்தர் ஒரு நாள் ஆபிரகாமைப் பார்த்து உன்னுடைய நேச குமாரனுமாகிய ஏக புதல்வனும் இருக்கிற ஈசாக்கை அழைத்துக் கொண்டுபோய் நான் உனக்கு காண்பிக்கும் மலையிலே அவனை எனக்கு தகன பலியாக பலியிடு என்றார். ஆபிரகாமை சோதிக்கும்படி கர்த்தர் அப்படி சொன்னார்.

கர்த்தர் சோதிக்கும்படி அப்படி சொல்லியிருந்தாலும் அந்த வார்த்தைகள் ஆபிரகாமை எப்படி உடைத்து இருந்திருக்கும் என்பதை யோசித்துப் பாருங்கள். எவ்வளவு மனம் நொந்து போயிருந்திருப்பார்! நீண்ட காலம் பிள்ளையில்லாமல் இருந்து கடைசியில் பிறந்த மகன் அவன். எவ்வளவு செல்லமாய் ஆபிரகாம் அவனை கொஞ்சி இருந்திருப்பார் அவனை பலி செலுத்துவது என்பது எவ்வளவு கடினமான ஒரு காரியம்!

ஆனால் வேதம் சொல்லுகிறது, ஆபிரகாம் ஆண்டவருக்குக் கீழ்ப்படிய தீர்மானித்தார். காரணம் என்ன? ஆபிரகாமுக்கு கர்த்தர் மேல் ஒரு விசுவாசம் இருந்தது. என் தேவன் இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிற தேவன். ஆகவே என் மகன் இறந்தாலும் அவனை அவர் உயிரோடு எழுப்ப வல்லமையுள்ளவர் அவரே தனக்காக யாவையும் செய்து முடிக்கிறவர் என்று அவர் விசுவாசித்தார்.

மகனை அழைத்துக்கொண்டு ஆபிரகாம் மோரியா மலையின்மேல் ஏறினார். மலையின் உச்சிக்கு வந்தபோது ஈசாக்கு ஆபிரகாமைப் பார்த்து அப்பா என்று அழைத்தான் மகனுடைய குரல் ஆபிரகாமுடைய உள்ளத்தை நிச்சயமாகவே உடைத்திருந்திருக்கும் அப்பா என்ற இனிய அந்த குரலை இனி நான் கேட்பேனா? அல்லது இந்த இனிய சத்தம் காற்றோடு காற்றாக கரைந்து போய்விடுமா? என்றெல்லாம் அங்கலாய்த்து இருந்திருப்பார்.

மகன் தொடர்ந்து, ''அப்பா, நெருப்பு இருக்கிறது. தகன பலிக்கு விறகு இருக்கிறது. ஆட்டுக்குட்டி எங்கே அப்பா?'' என்று கேட்டான். ஆபிரகாம் என்ன பதில் சொல்லியிருந்திருக்கக்கூடும்? தன்னை ஒரு நிமிடம் கட்டுப்படுத்திக்கொண்டு ஆபிரகாம் தன் மகனைப் பார்த்து, ''மகனே தகனபலிக்கான ஆட்டுக்குட்டியை கர்த்தர் பார்த்துக்கொள்வார்'' என்று சொன்னார். கர்த்தர் பார்த்துக்கொள்ளுவார் என்றால் என்ன அர்த்தம்? கர்த்தர் எனக்

காக யாவையும் செய்து முடிப்பார். ஆட்டுக்குட்டியைக் கொண்டு வருவார் என்பதுதான் அர்த்தமாகும் ஆபிர காமுக்கு அந்த விசுவாசம் இருந்தது. கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார் என்கிற விசுவாசம்.

பலிபீடத்தை எழுப்பினர். விறகு கட்டைகளை அடுக் கினர். ஈசாக்கைப் பிடித்து கை கால்களைக் கட்டி கட்டை யின் மேல் கிடத்தினர். கத்தியை ஓங்கினர். அப்போது வானத்திலிருந்து ஒரு குரல் கேட்டது.

''ஆபிரகாமே, பிள்ளையாண்டான் மேல் கையைப் போடாதே. ஆபிரகாம் கையை கீழேப்போட்டார். கர்த்தர் சொன்னர் பிள்ளையாண்டான்மேல் உன் கையைப்போடாதே, அவனுக்கு ஒன்றும் செய்யாதே, நீ அவனை உன்புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக்கொடுத்தபடியினல் நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந் திருக்கிறேன் என்றார்'' (ஆதி 22:12).

ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும் போது, இதோ, பின்னுகப் புதரிலே தன் கொம்புகள் சிக்கிக்கொண்டிருந்த ஒரு ஆட்டுக்கடாவைக் கண்டார். அப்பொழுது ஆபிரகாம் போய், கடாவைப் பிடித்து அதைத் தன் குமாரனுக்குப் பதிலாக தகன பலியிட்டார்

(ஆதி 22:1[illegible])

ஆபிரகாமுடைய உள்ளம் பொங்கினது. தனக்காக வும், தன் மகனுக்காகவும் யாவையும் செய்து முடித்த ஆண்டவரை நோக்கிப் பார்த்து யெகோவாயீரே என்று அழைத்தார். ஆகவே அந்த இடத்திற்கு யெகோவாயீரே என்ற பெயர் வழங்கப்பட்டது.

எனக்காக ஒரு ஆட்டுக்குட்டியை நியமித்து வை திருந்தீரே, அந்த ஆடு எனக்காக தன் கொம்புகளை எல்லாம் முட்புதலுக்குள் சிக்கிவைத்து நின்று கொண்டிரு

தேதே, என் பிள்ளைக்கு பதிலாக அந்த ஆடு தன்னை பலியாக ஒப்புக்கொடுத்ததே! கர்த்தரல்லவா இதை எல்லாம் எனக்காக செய்தார் என்று சொல்லி அவரது இருதயம் பொங்கியிருந்திருக்கும்.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, ஒரு நிமிடம் நாம் எல்லாரும் கண்களை மூடி கொஞ்ச நேரம் "யெகோவாயீரே" என்று பயபக்தியோடு சொல்லுவோமாக. என் யெகோவா தேவனே நீர் எனக்காக யாவையும் செய்து முடிக்கிற கர்த்தர் என்று சொல்லி அவரை போற்றுவோமா?

இஸ்ரவேலர் வாழ்க்கையிலே விசேஷமாக மோசேயின் அனுபவத்திலே கர்த்தர் அவர்களுக்காக யாவையும் செய்து முடித்தார் என்பதை நாம் அறியலாம். ஏறக்குறைய இருபது லட்சம் இஸ்ரவேலரை எப்படி எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எடுப்பது என்று மோசேக்கு தெரியவில்லை. மோசேயின் சொந்த பெலத்தினால் ஒன்றுமே செய்ய முடியாது.

பார்வோனைப் பார்த்தால் அவன் பயங்கரமாய் இருந்தான். அவனுக்கு சேனைகள் இருந்தது, இரதங்கள் இருந்தது, குதிரைகள் இருந்தது. அவனுடைய பலத்த கரத்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்களை எப்படி மீட்டு எடுப்பது?

மோசேயின் சொந்த பெலத்தினால் எகிப்தின் அடிமைத்தனத்தை மாற்ற இயலாது. இஸ்ரவேல் ஜனங்களும் அடிமைகளாய் இருந்ததினால் பார்வோனை எதிர்த்து போராட முடியாது. எந்த ஆயுதங்களும் அவர்களிடம் இல்லை. ஆனால் கர்த்தர் மோசேயைப் பார்த்து சொன்னார் நான் உனக்காக யாவையும் செய்து முடிப்பேன்.

யாவையும் செய்து முடிப்பேன் என்று சொல்லுகிற ஆண்டவரை, என்ன செய்ய போகிறீர் என்று மோசே கர்த்தரை நோக்கிக் கேட்டபோது கர்த்தர் சொன்னார்

நான் அநேகம் அற்புதங்களைச் செய்யப் போகிறேன். எகிப்திலே வாதைகளை அனுப்பபோகிறேன் எகிப்தி லுள்ள தலைச்சன்களை சங்கரிக்கப் போகிறேன். இஸ்ரவேல் ஜனங்களுக்கு பாதுகாப்பு கொடுக்கப்போகிறேன். ஒரு யுத்தமும் இல்லாமல், ஒரு இரத்தமும் சிந்தாமல், ஒரு இஸ்ரவேலனும் மரிக்காமல் நீங்கள் எகிப்தை விட்டு வெளியே போக போகிறீர்கள். காலூன சுதந்தரிக்கப் போகிறீர்கள். காரணம் நான் உங்களுக்காக யாவையும் செய்து முடிக்கிற தேவன்.

இஸ்ரவேலர் செய்ததெல்லாம் பஸ்கா ஆட்டுக்குட்டி யின் இரத்தத்தை அவரவர் வீட்டின் நிலைகால்களில் பூசியதுதான். இயேசுகிறிஸ்துவின் இரத்தத்திற்கு நிழ லாட்டமாய் அதற்கு பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம் நிலைகால்களிலே பூசப்பட்டிருந்தது. அந்த இரத்தம் இஸ்ர வேல் ஜனங்களை பாதுகாக்கக்கூடியதாகவும், எகிப்தின் குடும்பங்களுக்கு சங்கார தூதனை அனுப்பக்கூடியதாகவும் இருந்தது.

கர்த்தர் இஸ்ரவேலநுக்காக யாவையும் செய்து முடித் தார். ஆகவே இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து வெற்றிகரமாக வெளியே வந்தார்கள். ஆயிரமாயிரமான லட்சலட்சமான இஸ்ரவேல் மக்கள் வெளியே வந்தார் கள். ஆனால் கொஞ்ச நேரத்திற்குள் எல்லாம் பார்வோனு டைய சேனைகள் அவர்களைப் பின்தொடர ஆரம்பித்து விட்டது.

முன்னால் பார்க்கிறார்கள் பெரிய சிவந்த சமுத்திரம் நின்று கொண்டிருக்கிறது. பின்னால் பார்க்கிறார்கள் பார்வோனுடைய சேனைகள் வந்து கொண்டிருக்கிற து இரண்டு பக்கமும் பெரிய மலை. தடைகள் நின்று கொண் டிருக்கிறது சற்று அந்த காட்சியை சிந்தித்துப் பாருங் கள். முன்னால் கடல்; பின்னால் இராணுவம், இரண்டு பக் கமும் மலைகள். எங்கே போவது என்று அவர்களுக்குத் தெரியவில்லை. எல்லா பக்கமும் நெருக்கம்தான். முன்னு

லும் போக முடியவில்லை. பின்னாலும் போகமுடியவில்லை. பக்கவாட்டிலும் ஓட முடியவில்லை.

தேவனுடைய பிள்ளைகளே, இன்றைக்கு உங்களுக்கு ஒரு இரகசியத்தைச் சொல்லிக் கொடுக்கிறேன். எல்லா பக்கங்களிலும் உங்களுக்கு நெருக்கம் வரும்போது எந்த வழியில் செல்லுவது என்று தெரியாமல் நீங்கள் கலங்கும்போது கர்த்தர் உங்களுக்கு அற்புதத்தைச் செய்யப் போகிறார் என்பதை மறந்து போகாதிருங்கள். கர்த்தர் உங்களுக்காக யாவையும் செய்யப்போகிறதை எண்ணி அவரைத் துதியுங்கள். அப்போது அற்புதம் நிகழப் போகிறது என்பதை ஆவலுடன் எதிர்பாருங்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் எல்லா பக்கமும் நெருக்கப் பட்டபோது கர்த்தர் அவர்களுக்காக யாவையும் செய்து முடிக்க தீர்மானித்தார். கர்த்தர் மோசேயைப் பார்த்து உன்னுடைய கைகளில் உள்ள கோலை சிவந்த சமுத்திரத் திற்கு நேராய் நீட்டு என்றார். மோசே கோலை நீட்டிய போது சிவந்த சமுத்திரம் இரண்டாய் பிளக்க ஆரம் பித்தது.

எப்படி சிவந்த சமுத்திரம் பிளந்தது. ஞானிக்கும் தெரியாது, விஞ்ஞானிக்கும் தெரியாது, அஞ்ஞானிக்கும் தெரியாது. ஆனால் நமக்குத் தெரியும். கர்த்தர் நமக்காக யாவையும் செய்து முடிக்கிறவர். அவருடைய சுவாசமே சிவந்த சமுத்திரத்தை இரண்டாய் பிளந்தது. இஸ்ரவேல் ஜனங்கள் அந்த பாதையின் வழியாக தீவிரமாய் புறப் பட்டார்கள்.

நீண்ட தூரம் சென்று திரும்பி பார்த்தபோது பாரவோனுடைய சேனையும் இரதங்களும் குதிரைகளும் அவர்களைப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. ஐயோ பின்தொடர்ந்து வருகிறார்களே என்ன செய்வது? கொஞ்ச நேரத்தில் எங்களைப் பிடித்துவிடுவார்களே! பட் டய கருக்கினால் எங்களை வெட்டி விடுவார்களே என்று ஒருவேளை கலங்கி இருந்திருக்கக்கூடும்.

இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாம் சிவந்த சமுத்திரத்தைத் தாண்டிய உடனே கர்த்தர் மோசேயைப் பார்த்து உன்னுடைய கோலை நீ மறுபடியும் நீட்டு என்றார். பிரிந்திருந்த கடல் மீண்டும் ஒன்றாய் கூடியது. எல்லா எகிப்தியரும் சிவந்த சமுத்திரத்தில் அமிழ்ந்து மாண்டனர். அது எப்படி நடந்தது? ஆம், கர்த்தர் அவர்களுக்காக யாவையும் செய்து முடித்தார்.

மட்டுமல்ல, ஏறக்குறைய இருபது லட்சத்திற்கும் அதிகமான மக்களை வனாந்தரத்தில் போஷிப்பது எளிதான காரியமா? ஆனால் கர்த்தர் ஒவ்வொருநாளும் மன்னாவை அவர்களுடைய பாளயத்தில் வந்து விழும்படி செய்தார். காடைகள் பறந்து வந்து அவர்களுக்கு அருகாமையில் வந்து விழுந்தது. வஸ்திரம் பழுதாகி விடாதபடி வளர்ந்துகொண்டே இருந்தது. பாதரட்சையும் தேயாதபடி இருந்தன. கர்த்தர் அவர்களுக்கு ஆரோக்கியத்தையும் பெலத்தையும் கொடுத்தார். காண்டா மிருகத்திற்கு ஒப்பான பெலன் அவர்களுக்குள்ளே இருந்தது. காரணம் என்ன? கர்த்தர் அவர்களுக்காக யாவையும் செய்து முடித்தார்.

சிருஷ்டிப்பிலே அவர் யாவையும் செய்து முடித்தார். ஆபிரகாமுடைய வாழ்க்கையிலும் அவர் யாவையும் செய்து முடித்தார்.

## 3. சிலுவையில் யாவையும் செய்து முடித்தார்!

சிலுவையை நோக்கிப் பார்க்கிறோம். சிலுவையிலே நமக்காக பாடுகளையும், வேதனைகளையும் அனுபவித்த கர்த்தர், "முடிந்தது" என்று வெற்றி முழக்கமிட்டார். என்ன அர்த்தம்? என் பிள்ளைகளே, நான் உங்களுக்காக யாவையும் செய்து முடிப்பேன், முடித்துவிட்டேன்.

இயேசுவை நோக்கிப் பாருங்கள். அவருடைய தலையில் முள்முடி சூட்டப்பட்டிருக்கிறது கைகளில் ஆணிகள் கடாவப்பட்டிருக்கிறது. சரீரம் எல்லாம் சவுக்குகளினால் அடிக்கப்பட்டிருக்கிறது கால்களில் துளையிடப்பட்டிருக்கிறது. அந்த வேளையில் வெற்றி வேந்தனாய் முடிந்தது என்று கெம்பீரக்குரலில் அவர் கூறினார்.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, கர்த்தர் சிலுவையிலே நமக்காக யாவையும் செய்து முடித்தார். சிலுவையிலே இரட்சிப்பை சம்பாதித்துக் கொடுத்தார். சாபத்தின் வல்லமையை தகர்த்து முறித்தார். சத்துருவின் தலையை நசுக்கி முடித்தார். வியாதிகளை குணமாக்கிக் கொடுத்தார். விடுதலையையும், சமாதானத்தையும், நித்திய ஜீவனையும் சம்பாதித்துக் கொடுத்தார்.

சிலுவையை நோக்கிப் பார்க்கும் போதெல்லாம் நம்முடைய உள்ளம் சந்தோஷத்தினால் பொங்கட்டும். எங்கள் ஆண்டவர் எங்களுக்காக யாவையும் செய்து முடித்த இடம் அந்த கல்வாரி சிலுவை என்று உங்களுடைய உள்ளம் ஆனந்தப் பரவசமடையட்டும்.

உலகத்தோற்றத்திற்கு முன்பாக மனிதனுக்காக யாவையும் செய்து முடித்த கர்த்தர் அவன் பாவம் செய்தபோது பாவத்திற்கு நிவாரணத்தையும் செய்து முடிக்க சித்தமானார். குற்ற நிவாரண பலியாக தன்னைத்தானே ஒப்புக்கொடுக்க முன் வந்தார். கொல்கொதா மேட்டிலே கல்வாரி மலையிலே நமக்காக அவர் யாவையும் செய்து முடித்தார். அந்த சிலுவையை நோக்கிப் பார்க்கும் போதெல்லாம் நம்முடைய உள்ளம் நன்றியால் பொங்கட்டும்.

தம்முடைய சரீரம் எல்லாம் இரத்தம் ஒழுக ஒழுக நம்முடைய பாவங்களை கழுவிச் சுத்திகரிக்க சித்தமானார். முள்முடி சூட்டப்பட்டு முட்களாகிய சாபங்களால் நம் வாழ்க்கையை பின்தொடர்ந்த சகல சாபத்தையும் வல்லமையும் தகர்க்க சித்தமானார். கால்களில் ஆணிகள் கடா

வப்பட்டு சத்துருவின் தலையை நசுக்க சித்தமானார். சரீரம் எல்லாம் தழும்புகளை ஏற்றுக்கொண்டு நம்முடைய நோய்களை குணமாக்க சித்தமானார். விலாவிலே குத்தப்பட்டு நம்மை மணவாட்டியாய் மறுரூபமாக்க சித்தமானார். கெத்செமனே தோட்டத்திலே இரத்த வியர்வை சிந்தி நம்மை ஜெபவீரராய் மாற்ற சித்தமானார். ஆம் அருமையான தேவனுடைய பிள்ளையே, கல்வாரி சிலுவையிலே நமக்காக யாவையும் செய்து முடிக்க தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார்

நாம் செய்ய வேண்டிய ஒரே ஒரு காரியம் உண்டென்றால் அந்த கல்வாரி தியாகத்தை நாம் அப்படியே ஏற்றுக்கொள்ளுவதுதான். கல்வாரி சிலுவையை பயபக்தியோடு நோக்கிப் பார்த்து, ''எனக்காக அல்லவா என் ஆண்டவரே நீர் யாவையும் செய்து முடித்தீர்! நீர் செய்து முடித்த அந்த காரியங்களை எல்லாம் நான் அப்படியே ஏற்றுக்கொள்ளுகிறேன். அதை அப்படியே சுதந்தரித்துக் கொள்ளுகிறேன்'' என்று சொல்லி நாம் அந்த ஆசீர்வாதங்களைச் சுதந்தரித்துக்கொள்வோமாக!

வேதம் சொல்லுகிறது, ''நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்'' (ஏசா 53:4). அவரே நமக்காக யாவையும் செய்து முடிக்கிறவர்.

சிலுவையிலே அவர் முடிந்தது என்று சொன்ன வார்த்தை தோல்வியான வார்த்தை அல்ல. அது ஒரு வெற்றி முழக்கம். ஒரு வல்லமையான தளபதி யுத்தத்தை நடத்தி கொண்டுபோய் ஜெயம் பெற்று திரும்பி வருவதைப் போல கர்த்தர் கல்வாரி சிலுவையிலே யாவையும் நமக்காக செய்து முடித்தார். அவர் முழங்கிய ஜெயத்தின் முழக்கம்தான் முடிந்தது என்பதாகும்.

நம் அருமை ஆண்டவர் பெருமிதத்தோடும் மகிழ்ச்சியோடும் அந்த வார்த்தையை சொல்லியிருந்திருப்பார் என்று நான் நம்புகிறேன் என் பிள்ளைகளே, உங்களுக்காக நான் யாவையும் செய்து முடித்து விட்டேன். இனி சாபம் உங்களை மேற்கொள்ளாது. சத்துருவின் வல்லமை உங்களை மேற்கொள்ளாது பில்லிசூனியம் உங்களை மேற்கொள்ளாது. மந்திரவாதிகள் உங்களை மேற்கொள்ள மாட்டார்கள். உங்களுக்காக யாவையும் செய்து முடிக்கிறவர் உங்கள் தேவனாகிய கர்த்தர் நான்.

ஒருமுறை சக்கரவர்த்தியான நெப்போலியன் யுத்தகளத்திற்கு தன்னுடைய வீர தளபதியை அனுப்பி வைத்தார். நீ குறிப்பிட்ட பட்டணத்திற்கு நேராய் யுத்தத்திற்கு புறப்பட்டு செல். அந்த பட்டணத்திலுள்ள வீரர்கள் பிரசித்திபெற்றவர்கள்தான். வல்லமையுள்ளவர்கள் தான். நீ அவர்களோடு வீராவேசமாய் போரிட்டு ஜெயம் பெற்றேன் என்ற மகிழ்ச்சியான செய்தியை எனக்குக் கொண்டு வர வேண்டும். ஜெயம்பெற்ற செய்தியை நீ கொண்டு வருகிற வரையிலும் நான் உனக்காக காத்துக் கொண்டேயிருப்பேன் என்று சொல்லி நெப்போலியன் தளபதியை தைரியப்படுத்தி அனுப்பினான்.

அந்த தளபதி தன் வீரர்களை கூட்டிக் கொண்டு வந்து பட்டணத்தை முற்றுகையிட்டான். வீராவேசமாய் போர் செய்தான். ஆனல் அந்த பட்டணத்தை பிடிப்பது அவ்வளவு எளிதான காரியமாய் இருக்கவில்லை. அந்த வீரர்களும் வல்லமையோடு போராடினார்கள். விடாமல் சோர்ந்துபோகாமல் சண்டையிட்டார்கள். யுத்தம் தீவிரமானது.

எனினும் அந்த வீரமிக்க தளபதி தானே போர் முனைக்கு சென்று சத்துருக்களோடு வீராவேசமாய் போர் செய்தார். அவருடைய உடம்பெல்லாம் தழும்புகள். சரீரம் எல்லாம் ஈட்டி குத்துக்கள். எனினும் அவர்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

மென்று நீர் என்னை அனுப்பினீரோ அந்த காரியங்களை எல்லாம் நான் செய்து முடித்து விட்டேன். இப்பொழுது உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புக்கொடுக்கிறேன் என்று சொல்லி ஆவியை ஒப்புக்கொடுத்தார்.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, தம்மையே நமக்காக தந்த கிறிஸ்து தம்முடைய கடைசி சொட்டு இரத்தத்தையும் ஊற்றிக்கொடுத்த இயேசு கிறிஸ்து நமக்காக யாவையும் செய்து முடிக்கிறவர். அவரை உறுதியாய் பற்றிக்கொள்ளுங்கள் இந்த நாளிலே உங்கள் ...மனதுருகி உங்களுக்காக யாவையும் செய்து முடிப்பார்.

## 4. நித்தியத்தில் யாவையும் செய்து முடிப்பார்!

உலகத்தோற்றத்திற்கு முன்பாக யாவையும் செய்து முடித்தார். உலகத்தில் வாழப்போகும் நமக்காக சிருஷ்டிப்பிலே யாவையும் செய்து முடித்தார். கல்வாரி சிலுவையிலே நமக்காக யாவையும் செய்து முடித்தார். மாத்திரமல்ல, நித்தியத்திலும் நமக்காக யாவையும் செய்து முடித்தார்.

யோவான் 14:2,3-ம் வசனத்தை வாசித்துப் பாருங்கள். ''என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன் நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்.''

அன்போடு அவர் கூறுவதை தியானித்துப் பாருங்கள். ''என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. எனினும் நான் உங்களுக்காக விசேஷமான இடத்தை ஆயத்தம் பண்ணபோகிறேன்'' என்று சொல்லுகிறார்.

எந்த இடத்தில் அவர் ஆயத்தம் பண்ண போகிறாராம்? அவர் இருக்கிற அதே இடத்திலே நாம் இருக்கும்படி நமக்கு ஆயத்தம் பண்ணியிருக்கிறார்.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, இன்னும் நூறு ஆண்டுகள் கழித்து நாம் எங்கே இருப்போம்? இங்கே இதே இடத்தில் உட்கார்ந்திருப்போமா? இல்லை. இன்னும் பத்தாயிரம் வருடங் கழித்து நாம் எங்கே இருப்போம்? ஒருபோதும் பூமியில் இருக்கப் போவது இல்லை.

நாம் கர்த்தரோடு என்றென்றைக்கும் இருக்கும்படி கர்த்தர் பரலோக ராஜ்யத்திலே நமக்கு வாசஸ்தலங்களை ஆயத்தம் பண்ண சித்தமானார்.

ஒரு நாள் அந்த ஒளிமயமான தேசத்திற்குள் நாம் பிரவேசிக்கும்போது முழு பரலோகமும் நமக்கு கோலாகலமான வரவேற்பு கொடுக்கும். கர்த்தர் நம்மை அன்போடுகூட நமக்காக ஆயத்தம் செய்த வாசஸ்தலத்திற்கு அழைத்துக் கொண்டு போவார். மகனே உன்னை எண்ணி எண்ணி இந்த வாசஸ்தலத்தை உனக்காக ஆயத்தம் பண்ணினேன் என்று சொல்லுவார்.

அந்த பரலோக வாசஸ்தலங்கள் எவ்வளவு அழகாய் இருக்கும்!

என்னுடைய வாசஸ்தலம் எங்கே? என்று நான் ஆவலோடு கேட்பேன். சாம் ஜெபத்துரை என்று என் பெயர் பொறிக்கப்பட்ட வாசஸ்தலத்தை கர்த்தர் காண்பித்து மகனே உனக்காக இதை ஆயத்தம் பண்ணினேன் என்று அவர் சொல்லும்போது என் உள்ளம் மகிழ்ந்து களிகூர்ந்து துள்ளும்.

ஆதாம் ஏவாளுக்காக ஆறுநாட்கள் கஷ்டப்பட்டு நான் உலகத்தை உண்டாக்கினேன். ஆனால் உன்மேல் விசேஷ அன்பு வைத்ததினாலே ஆறு நாட்களல்ல, இரண்

டாயிரம் ஆண்டுகளாய் இந்த வாசஸ்தலத்தை எல்லாம் ஆயத்தம் செய்திருக்கிறேன் என்று சொல்லுவார்.

அந்த அழகை எப்படி வர்ணிப்பது? அந்த வாசஸ்தலங்கள் எல்லாம் தங்க மயமாய் இருக்கும் என்று சொல்லுவதா? வைரம், வைடூரியம் பதிந்ததாயிருக்கும் என்று சொல்லுவதா? முத்துபோல் வெண்மையாயிருக்கும் என்று சொல்லுவதா? அந்த வாசஸ்தலம் எல்லாம் நம் ஆண்டவர் நம் மேல் வைத்த அன்பை வெளிப்படுத்திக் கொண்டேயிருக்கும்.

பரலோக வீதியில் நான் அவரோடுகூட நடப்பேன். மகனே உனக்காக ஜீவவிருட்ச மரங்கள் எல்லாம் இங்கே ஆயத்தம் பண்ணியிருக்கிறேன். இந்த ஜீவ நதியைப் பார்த்தாயா? என்று பாசத்தோடு கேட்பார்.

வா என்னோடு கூட வா ஜீவ புத்தகத்தில் உன்னுடைய பெயர் எழுதியிருக்கிறதை நான் உனக்குக் காண்பிப்பேன் என்று சொல்லி அந்த பெயரை எல்லாம் காண்பிப்பார். என்னுடைய உள்ளம் ஆனந்த பரவசமடையும்.

ஜீவ கிரீடத்தைக் கொண்டு வருவார். மகனே உனக்காக இந்த கிரீடத்தை ஆயத்தம் பண்ணினேன். இது வாடாத ஜீவ கிரீடம் என்று சொல்லுவார்.

பரலோக வங்கிக்கு கொண்டு போவார். உன்னுடைய கணக்கில் பரலோகத்தில் எவ்வளவு பணம் சேர்ந்திருக்கிறது. நீ பூமியில் வாழும்போது பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைத்தாய். எல்லாம் உன்னுடையது என்று சொல்லுவார்.

தேவன் நமக்கு வைத்திருக்கிறவைகளை எல்லாம் கண்டு களிக்க ஆயிரமாயிரம் கண்கள் வேண்டும்.

ஏசாயா தீர்க்கதரிசி சொல்லுகிறார், "தேவனே, உமக்குக் காத்திருக்கிறவர்களுக்கு நீர் செய்பவைகளை, நீரே

யல்லாமல் உலகத்தோற்றம் முதற்கொண்டு ஒருவரும் கேட்டதுமில்லை, செவியால் உணர்ந்ததுமில்லை, அவை களைக் கண்டதுமில்லை'' (ஏசா 64:4).

நம் கர்த்தர் நமக்காக யாவையும் செய்து முடிக்கிற தேவன். சிருஷ்டிப்பிலே நமக்காக யாவையும் செய்து முடித்தார். சிலுவையிலே நமக்காக யாவையும் செய்து முடித்தார். நித்தியத்திலே நமக்காக யாவையும் செய்து முடிப்பார்.

நாம் எல்லாரும் எழுந்துநின்று ஆண்டவரை கொஞ்ச நேரம் ஸ்தோத்திரம் பண்ணுவோம் நம் உள்ளம் நன்றியால் நிரம்பட்டும். நமக்காக யாவையும் செய்து முடித்த கர்த்தரை உள்ளத்தின் ஆழத்திலிருந்து முழு பெலத்தோடும் ஸ்தோத்தரிப்போமாக.

இதுவரையிலும் அவர் நமக்காக யாவையும் செய்து முடித்தார். இனிமேலும் நமக்காக யாவையும் செய்து முடிப்பார். எண்ணில்லாத நன்மைகளை நமக்குத் தந்த தேவன் இன்னும் எண்ணில்லாத நன்மைகளை நமக்குக் கட்டளையிடுவார். ஆமென், அல்லேலூயா!

## ஆவிக்குரிய நூல்கள்

ஆவிக்குரிய ஜீவியத்தில் வளருவதற்கும், ஆத்துமா பெலன் கொள்வதற்கும் ஆவிக்குரிய நூல்கள் இன்றியமையாதவை

ஏறக்குறைய 235க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதிய சகோ. J. சாம் ஜெபத்துரை அவர்கள் இந்நூலையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

பதினாறு ஆண்டுகள் அரசாங்கத்தில் பணியாற்றிய அவர், தன் வேலையை ராஜினாமா செய்துவிட்டு முழுநேர ஊழியத்தில் 1985 ஆண்டு தீவிரமாக இறங்கினார். வல்லமையான மேடைப் பேச்சினாலும் எழுத்து ஊழியத்தினாலும் ஆயிரக்கணக்கானோரை அவர் கர்த்தருக்குள் வழி நடத்தியிருக்கிறார். இவர் கர்த்தரின் எழுத்தாணி.

புத்தக ஊழியத்தை ஊக்குவியுங்கள். அனேக ஆவிக்குரிய புத்தகங்கள் வெளிவர ஜெபியுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!


புஸ்தகங்கள் கிடைக்கும் இடம் :

**J. சாம் ஜெபத்துரை, M. A.,**

50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம், சென்னை - 600 024.


